# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE. TIRUVANNAMALAI.

**S.C. No 107 /2014**
**PW 23**

| | | |
|---|---|---|
| Name | : | **சின்னராஜ்** |
| Father's/Husband's Name | : | **ராமன்** |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18.03.2025.

**A1 - 3 Present.**
**முதல் விசாரணை –**

(1) நான் தற்போது விழுப்புரம் மாவட்டம், பணியிடை பயிற்சி கல்லூரியில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிகிறேன். கடந்த 25.04.2013 அன்று தண்டராம்பட்டு காவல் நிலையத்தில் வட்ட ஆய்வாளராக பணியில் இருந்தபோது தண்டராம்பட்டு காவல் நிலைய குற்ற எண். 120/2013, இதச பிரிவு 302 – சட்டப்பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கையை சிறப்பு உதவி ஆய்வாளர் நடராஜன் என்பவர் பாலு என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்து வைத்திருந்தார். மேற்படி வழக்கை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 26.04.2013 ம் தேதியன்று காலை 6.00 மணிக்கு சம்பவயிடம் சென்று பார்வையிட்டு சாட்சிகள் பாண்டியன், வேலு ஆகியோரின் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ.15. அந்த மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.16.** சம்பவிட சாட்சிகள் பாலு, பச்சையம்மாள், சரளா, குணசேகரன், கெங்கா (எ) கெங்கையமரன், வேலு, வீராசாமி, சிரஞ்சீவி,

சவுந்தர், சிவலிங்கம், தங்கவேல் மகன் வேலு, குமார், பாக்கியராஜ், பிரபு ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

(2) சம்பவியிடமான வீராசாமியின் என்பவரின் மெத்தை வீட்டின் திண்ணை வீட்டினிடம் காலை 6.45 மணியளவில் வீட்டின் சிமெண்ட் சுவற்றில் இரத்தக்கரை படிந்த சிமெண்ட் காரைத்துண்டு வெட்டி எடுக்கப்பட்டு சிறிய துண்டுகள் – 4, இரத்தக்கறை படியாத சிமெண்ட் காரை வெட்டி எடுக்கப்பட்டு சிறிய துண்டுகள் – 4, சம்பவயிடத்தில் இருந்து சுமார் 4 அடி துாரத்தில் மண் தரையில் இரத்தக்கறை படிந்த மண் கொஞ்சம், சம்பவயிடத்தில் இருந்து சுமார் 4 அடி துாரத்தில் மண் தரையில் இரத்தக்கறை படியாத சாதாரண மண் கொஞ்சம் மேற்படி அதே சாட்சிகளின் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.17.** தற்போது நீதிமன்றத்தில் காட்டடப்படும் **இரத்தக்கறை படிந்த காரை துண்டுகள் சா.பொ.2.** தற்போது நீதிமன்றத்தில் காட்டடப்படும் **இரத்தக்கறை படியாத காரை துண்டுகள் சா.பொ.3.** தற்போது நீதிமன்றத்தில் காட்டடப்படும் **இரத்தக்கறை படிந்த மண் சா.பொ.4.** தற்போது நீதிமன்றத்தில் காட்டடப்படும் **இரத்தக்கறை படியாத மண் சா.பொ.5.**

(3) பின்னர் காலை 8.30 மணிக்கு திருவண்ணாமலை அரசு மருத்துவமனை சென்று சவக்கிடங்கில் இருந்த கொலையுண்டு இறந்துபோன பாபு என்பவர் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் காலை 8.30 மணி முதல் 11.00 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.18.** பின்னர் இறந்தவரின் இறப்பிற்கான உண்மையான காரணம் குறித்து அறிய பிரேத பரிசோதனை செய்ய காவலர் 106 முருகன் என்பவரிடம் வேண்டுகோள் கொடுத்தேன். பின்னர் பிரேத பரிசோதனைக்கு முன்னர் இறந்தவரின் உடலை நல்லடக்கம் செய்ய வாதியிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தின் மீது இருந்த ஆடைகளான மெரூன் குங்கும கலர் இரத்தக்கறை படிந்த வேட்டி 1, இரத்தக்கறை படிந்த பிரவுன் கலர் ஜட்டி – 1 அதில் ராம்ராஜ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் வெளிர் சந்தன கலர் இரத்தக்கறை படிந்த முழுக்கை சட்டை – 1 ஆகியவற்றை மேற்படி காவலர் முருகன் என்பவர் ஆஜர் செய்ததை படிவம் 95 ன் மூலம் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டடப்படும் மெரூன் குங்கும கலர் இரத்தக்கறை படிந்த வேட்டி **சா.பொ.6**. இரத்தக்கறை படிந்த பிரவுன் கலர் ஜட்டி – அதில் ராம்ராஜ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது **சா.பொ.7**. வெளிர் சந்தன கலர் இரத்தக்கறை படிந்த முழுக்கை சட்டை **சா.பொ.8**. பின்னர் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியை தேடி கீழ்ச்சிறுப்பாக்கம் தண்ணீர்பந்தல் கீழ்வணக்கம்பாடி ஆகிய இடங்களில் தேடியும் புலன் வைத்தும் எனக்கு கிடைத்த தகவலின்பேரில் பகல் 2.15 மணிக்கு

கீழ்வணக்கம்பாடி தண்ணீர்பந்தல் செல்லும் ரோட்டின் வடக்கு பக்கம் உள்ள வேடியப்பன் கோயிலிடம் இருந்த நபரை விசாரித்து அவர் தான் வழக்கின் முதல் எதிரி சுந்தரமூர்த்தி என்று தெரிந்து கொண்டு பகல் 2.30 மணிக்கு கைது செய்தும் சாட்சிகள் செல்லபாண்டியன், கோவிந்தராஜ் ஆகியோர்களின் முன்னிலையில் விசாரணை செய்தபோது அவர் தாமாக வந்து முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் பாபுவை குத்திய கத்தியை கீழ்ச்சிறுப்பாக்கம் பெரியேரி மேற்கு பக்கம் உள்ள ஓணான் தண்டு புதரில் உள்ள பாறையின் பக்கத்தில் வைத்திருப்பதாகவும் அதை எடுத்துக் கொடுப்பதாகவும் சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.19.** எதிரி சொன்ன இடத்திற்கு மாலை 4.30 மணிக்கு சென்றோம். அங்கு அதே சாட்சிகளின் முன்னிலையில் சுமார் 27 செமீ நீளமுள்ள இரத்தக்கறை படிந்த ஒரு கூரிய கத்தியை எதிரி எடுத்து ஆஜர்படுத்தினார்.அதே இடத்தில் எதிரி சம்பவ நேரத்தில் தான் அணிந்திருந்த காப்பி கலர் மற்றும் ஆரஞ்சு கலர் கலந்த இரத்தக்கறை படிந்த Bachelor Shirts என்று எழுதப்பட்ட அரைக்கை சட்டை, மற்றும் இரத்தக்கறை படிந்த வெள்ளை கலர் Bermudas அரைக்கால் பேண்ட், FRS Sports என்று எழுதப்பட்டதை எடுத்து ஆஜர்படுத்தினார். அதை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.20**. தற்போது காட்டப்படும் கத்தி தான் எதிரி ஆஜர்படுத்தியது. அது சா.பொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி ஆஜர்படுத்திய காப்பி கலர் மற்றும் ஆரஞ்சு கலர் கலந்த இரத்தக்கறை படிந்த Bachelor Shirts என்று எழுதப்பட்ட அரைக்கை சட்டை **சா.பொ.9**. இரத்தக்கறை படிந்த வெள்ளை கலர் Bermudas அரைக்கால் பேண்ட், (FRS Sports) **சா.பொ.10.** பின்னர் எதிரி மற்றும் வழக்குச் சொத்துக்களுடன் மாலை 6.30 மணிக்கு நிலையம் சேர்ந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்குச் சொத்துக்களை படிவம் 95 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

(4) பின்னர் 27.04.2013 ம் தேதியன்று வழக்கில் கண்ட மற்ற எதிரிகளை தேடி கீழ்ச்சிறுப்பாக்கம், திருவண்ணாமலை ஆகிய இடங்களில் தேடி கிடைத்த தகவலின் பேரில் காலை 11.00 மணிக்கு தென்மாத்துார் பஸ் ஸ்டாப்பிடம் நின்று கொண்டிருந்த நபர்களை அடையாளம் காண்பித்து விசாரித்து, எதிரிகள் மாணிக்கம், அண்ணாமலை ஆகியோரை காலை 11.15 மணிக்கு கைது செய்தேன். பின்னர் எதிரிகளுடன் 12.15 மணிக்கு காவல் நிலையம் வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

(5) மேலும் இந்த வழக்கின் சம்பவயிடத்தில் இருந்து எடுக்கப்பட்ட வழக்குச் சொத்துக்களான காரை, மண் மற்றும் கத்தி, உடைகள் ஆகியவற்றை

இராசாயன பரிசோதனைக்கு நீதிமன்றம் மூலம் வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். மேலும் இறந்த நபரின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட நாவடி எலும்பை நீதிமன்றம் மூலம் செங்கல்பட்டு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு ஆய்வுக்காக அனுப்பி வைத்தேன். உடல் உள் உறுப்புகளை வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன்பின்னர் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் செல்லபாண்டியன், கோவிந்தராஜன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பின்னர் சாட்சிகள் தலைமை எழுத்தர் சௌந்தர்ராஜன், வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குனர் அசோக்குமார், செங்கல்பட்டு அரசு மருத்துவமனை அரசு மருத்துவர் பராசக்தி, உடற்கூராய்வு செய்த திருவண்ணாமலை அரசு மருத்துவமனை மருத்துவர் அரவிந்தன், காவலர் முருகன், சிறப்பு உதவி ஆய்வாளர் நடராஜன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். வழக்கை இதச 302 ல் இருந்து இதச பிரிவுகள் 294(பி), 506(1), 302 உ/இ 34ன் படி பிரிவு மாற்றம் செய்து அந்த அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த பிரிவு மாற்றுதல் அறிக்கை **அ.சா.ஆ.21.** பின்னர் விசாரணை முடித்து மேற்படி பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை எதிரியின் மீது தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சி வீராசாமி, சௌந்தர், சிவலிங்கம், குமார், கோவிந்தராஜ், வேலு, சிரஞ்சீவி, வேலு, பிரபு, பாண்டியன், தனபால், அமாவாசை, செல்லபாண்டியன் ஆகியோர்கள் 161 குவிமுச வாக்குமூலத்தில் கண்டவாறு என் விசாரணையில் சொல்லியுள்ளார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> – இல்லை.

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/-B.C.Gopinath.,M.L.,**
**Additional District Judge,**
**Tiruvannamalai.**